சென்னை பொது மருத்துவ மனை.

*246 வினா.—திரு. கே.எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை சென்ட்ரல் ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் சென்னை மத்திய சிறைச்சாலையை வேறிடத்திற்கு மாற்றுவதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அங்கேயில்லாவிட்டாலும் கூட, கூவம் நதிக்குத் தெற்கே உள்ள இடத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான இடம்—அதை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கி—ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் முயற்சியை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னைப் பொது மருத்துவ மனை அமைந்திருக்கும் அதே இடத்தில்தான் அதன் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைக் கடந்து வேறு இடத்திற்குச் சென்றால், அது தனி மருத்துவ மனையாகத்தான் அமைய வேண்டும். அப்படித் தனியாக மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2 மைல் 4 மைல் தள்ளி இன்னொரு மருத்துவ மனை அமைத்தால் அது சென்னை நகர மக்களுக்கு மிகவும் பயன்படும். அதே நேரத்தில் சென்னை பொது மருத்துவ மனையின் பணிகளை முன்னேற்றுவதற்காக, அங்கே இருக்கிற மருத்துவ சிகிச்சையை உயர்த்துவதற்காக, போஸ்ட்-கிராஜுவேட், மேற்பட்டப் படிப்புக்கு அதை உயர்த்துவதற்கு, அதை ஒரு மேற்படிப்பு மருத்துவக் கல்லூரியாக உயர்த்துவதற்குப் படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

*247 வினா. திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1971-72-ஆம் ஆண்டிற்கு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுள் பெண்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 288 பெண்கள்.

1972 ஆகஸ்ட் 22]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 288 மாணவிகள் சேர்ந்து இருப்பதாகச் சொன்னார்கள். இந்த விகிதாச்சாரம் அதிகமாக இருக்கிறது. இதனால் ஆண்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே இந்த விகிதாச்சாரத்தைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த விகிதாச்சாரம் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் அதற்கும் மேலாகத் தரவேண்டுமென்று 1971-72- வரை இருந்தது. 1971-72-ல் அந்த விகிதாச்சாரம் ஏறத்தாழ 28—29 விழுக்காட்டிற்கு வந்திருக்கிறது. அதிகமாக மருத்துவர்கள் குடும்ப நலப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், தாய்மார்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கும் தேவைப்பட்டதால் அந்த விகிதத்தை உயர்த்த விரும்பி இந்த ஆண்டு 35 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் அதுபற்றி மறு பரிசீலனை செய்யக் கூடும்.

திரு. ந. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் அளிப்பது எந்த விகிதாச்சாரத்தில்? தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, முற்பட்ட வகுப்பு என்ற முறையில் மாணவிகளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெரும்பாலும் இந்த விகிதாச்சாரம் இயன்ற அளவுக்குப் பின்பற்றப்படும்.

*248 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கான இடங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடங்கள் அதிகப்படுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இனிமேலாவது அடுத்த ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் அதிகப்படுத்துவதுபற்றி அரசு யோசிக்க முன்வருமா ? மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை அமுலுக்குக் கொண்டுவந்து அதன் மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் கேட்ட இரண்டு, மூன்று கேள்விகளுக்கு நான் விளக்கமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று, மருத்துவ நிபுணர் குழுவும், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெறும் முறையின் விளைவை ஆராய்ந்த